**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

| | |
|---|---|
| Case No: | **SPL.CC.No.26/2025** |
| Prosecution Witness : | **LW - 12 / PW - 8** |
| Name : சுரேஷ் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **<u>27.07.2026</u>**

**(எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது உதவி மின் பொறியாளராக கல்லக்குடி மின்வாரியத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.07.2020 முதல் 19.10.2020 வரை சுத்தமல்லி பிரிவு அலுவலகத்தில் உதவி மின் பொறியாளராக கூடுதல் பொறுப்பேற்று பணிபுரிந்தேன். ஆஜர் எதிரிகள் ராஜுவ்காந்தி மற்றும் சரவணனை தெரியும். உதவி மின் பொறியாளர் என்ற முறையில் என்னுடைய பணி தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகம் சம்மந்தமான பணிகளை பராமரிப்பது, மற்றும் பணி செய்வது, பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்வது, மின்மாற்றிகளை பராமரிப்பது, திட்டமதிப்பீடு செய்வது மற்றும் மின் நுகர்வோர்களுக்கு முன்உரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்குவது ஆகியவை என்னுடைய பணி ஆகும். தர்மலிங்கம் என்பவர் தக்கல் திட்டத்தில் விவசாய மின் இணைப்பு வேண்டி சுத்தமல்லிபிரிவு அலுவலகத்தில் ரூ.2,75,000/-க்கான வரைவோலை செலுத்தி தயார்நிலை பதிவு செய்திருந்தார். நான் கடந்த 20.08.2020 அன்று காவல் ஆய்வாளர் அரியலூர் விஜிலென்ஸ் அவர்கள் என்னை விசாரித்தபோது, பணி நான் பணி ஒதுக்கீடு பதிவேட்டை ஆஜர் செய்தேன். அது தான் தற்போது

என்னிடம் காட்டப்படுவது, அது **அ.த.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தர்மலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணியாணையை விஜிலென்ஸ் ஆய்வாளரிடம் கொடுத்தேன், அந்த ஆணை **அ.த.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விஜிலென்ஸ் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் **27.04.2017** முதல் **10.06.2019** வரை சுத்தமல்லி பிரிவு அலுவலகத்தில் பொறுப்பு அலுவலராக இருந்தேன் என்றால் சரிதான். புகார்தாரர் தர்மலிங்கம் **17.07.2018** ல் தான் ரூ.**2,75,000/-** ரூபாய் வரைவு காசோலை சமர்ப்பித்தார் என்றால் சரிதான். வரைவு காசோலை சமர்ப்பித்த நாளில் இருந்து **10.06.2019** வரை தர்மலிங்கத்திற்கு மின் இணைப்பு வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் முன்னுரிமை அடிப்படையில் வரிசை படி அனைத்து நுகர்வோருக்கும் மதிப்பீடு தயார் செய்து அதன் அடிப்படையில் தான் மின் இணைப்பு வழங்கப்படும். தர்மலிங்கத்திற்கு மின் இணைப்புக்கான மதிப்பீடு மட்டும் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தக்கல் திட்டத்தில் பணம் செலுத்திய வரிசை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படுமா அல்லது பணிக்கு தகுந்தவாறு வரிசை படுத்தப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படுமா என்றால் மின் கம்பங்கள் அமைக்கப்படாத இடத்தில் மின் இணைப்பு கேட்டிருந்தால் அது **Mere Category** என்றும், மின் கம்பங்கள் இருக்கும் இடத்தில் மின் இணைப்பு கேட்டிருந்தால் **Minor Category** என்றும் வகைப்படுத்வோம். மின் மாற்றிகள் அமைத்து மின் இணைப்பு வழங்கப்படுவது **Major Category** என வகைப்படுத்தப்படும். அதன் அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலித்து வரிசைபடுத்துவோம். புகார்தாரர் தர்மலிங்கம் **Major Category** ல் வருவதால் திட்ட அதன் அடிப்படையில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. **Major category** அடிப்படையில் தான் உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெறப்பட்டது என்றால் சரிதான். புகார்தாரர் தர்மலிங்கம் **Major Category** ல் **10** வது வரிசையில் இருந்தார்

என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி ஒரு வருட காலத்தில் தர்மலிங்கம் என்னை என் அலுவலகத்தில் சந்தித்து ஏன் மின் இணைப்பு வழங்கவில்லை என்று கேட்டாரா என்றால் அது எனக்கு சரியாக நினைவில் இல்லை. மதிப்பீடு வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த மதிப்பீடு வரைபடத்தில் சவேரிபட்டி கிராமத்தில் இருக்கும் காக்காபாளையம் SS.11 ல் இருந்து HD Line 14 மின் கம்பங்கள் தரம் உயர்த்தி புதிய மின் கம்பி இழுக்கப்பட்டு, Transformer கம்பம் நட்டு, அதிலிருந்து 3 கம்பங்கள் புகார்தாரர் தர்மலிங்கம் நிலத்திற்கு நடப்படவேண்டும் என்றால் வரைபடத்தை நான் ஆய்வு செய்த வகையில் அவ்வாறு தான் இருந்தது. (அந்த ஆவணம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டு அ.த.சா.ஆ.12 ல் உள்ளது.) இந்த வரைபடம் ஆக்க முகவர் சித்ரா என்பவர் இடத்தை ஆய்வுசெய்து, என்னிடம் ஒப்படைத்த அறிக்கையின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்றால் குபேந்திரன் என்ற மின் பாதை ஆய்வாளர் தான் ஆய்வு செய்திருக்கிறார். அதில் நான் கையெழுத்து செய்திருக்கிறேன். 10.06.2019 ல் 1ம் எதிரி ராஜுவ்காந்தி பொறுப்பேற்றதற்கு முன்பே எந்தவிதமான தளவாட பொருட்களும் Major Category மின் துறையில் கொள்முதல் செய்யப்படவில்லை என்றாலும், அந்த வரிசையில் எந்த மின் இணைப்பும் கொடுக்கப்படவில்லை என்றாலும் அது எனக்கு சரியாக நினைவில் இல்லை. மின் இணைப்பு தக்கல் திட்டத்திலும், மற்ற திட்டங்களிலும் வரிசை படி தான் தர முடியும் என்றாலும், பின்னால் இருப்பவர்களுக்கு முன்னுரிமை தர முடியாது என்றாலும் சரிதான். ஒரு நபருக்கு மின் மாற்றி வைப்பதற்கு அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்ட பிறகு தான் உரிய அதிகாரியின் அனுமதி பெற்று மின்மாற்றி பெட்டியிலிருந்து மின் இணைப்பு தர முடியும் என்றால் சரிதான். புகார்தாரர் தர்மலிங்கம் கேட்டிருந்த மின் இணைப்பு கொடுப்பதற்கு தொடர்ந்து வேலை செய்தாலும் குறைந்தபட்சம் 20 நாட்கள் ஆகும் என்றால் ஒரு வார காலத்தில் முடித்து விடலாம். ஆனால் 2 நாட்களில்

செய்து முடிக்க முடியாது என்றால் சரிதான். தர்மலிங்கத்திற்கு மின் இணைப்பு வழங்க கூடாது என்று ஆரோக்கியசாமி, மருதகாசி என்பவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 08.02.2020 அன்று எதிரிகளை கைது செய்த பின் பணி ஒதுக்கீடு பதிவேட்டில் பணி ஒதுக்கீடு யாரால் எழுதப்பட்டது என்றால் அது எனக்கு தெரியவில்லை. அப்போது அங்கு நான் பணியில் இல்லை. புகார்தாரருக்கு பின் வரிசையில் உள்ளவர்களுக்கு மின் இணைப்பு கொடுத்துவிட்டதாக சொல்லியிருக்கிறார் என்றால் அவ்வாறு பின் வரிசையில் உள்ளவர்களுக்கு கொடுக்க முடியாது.

**மறு விசாரணை–**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.